# வெங்காயம்

இதழ் 1

மாதம் ஒருமுறை இதழ்

செப்டம்பர் - 2020






## அரசும் புரட்சியும்!

## • அண்ணா! அரசியல் அதிகாரம்!

## • அம்பேத்கரின் பவுத்த ஜனநாயகம்

# உள்ளே...


- வாழ்த்துரை - பேராசிரியர் சுப. வீரபாண்டியன் - 2
- வெங்காயம் - ஒரு விளக்கம் - 3
- அம்பேத்கரின் பவுத்த ஜனநாயகம் - 4
- எழுக திராவிடம் - 5
- அண்ணாவின் அரசியல் அதிகாரம் - 7
- அம்பேத்கர் - பெரியார் படிப்பகம் - 8
- சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை ஏன் எதிர்க்கப்பட வேண்டியது? - 9
- அரசும் புரட்சியும் - 11



நம் நாட்டில் தமிழர்களில் எத்தனையோ யோக்கியர்கள், விவேகிகள், கெட்டிக்காரர்கள் இருந்தாலும் அவர்கள் பொது ஜனங்களுக்குத் தெரியக் கூடாதவராய் இருக்கிறார்கள். இதன் காரணம் தமிழர்களுக்கு செல்வாக்கும் சக்தியுமுள்ள பத்திரிகையில்லை.

மகாத்மா காந்திக்கே தமிழ்நாட்டில் தமிழர் யோக்கியதை தெரிய வேண்டுமானால் ஒரு பிராமணனைக் கொண்டோ ஒரு பிராமண பத்திரிகையைக் கொண்டோதான் தெரிந்து கொள்ள வேண்டும்..... தமிழர்களின் யோக்கியதை தமிழ்நாட்டினருக்குத் தெரியவேண்டுமானால் பிராமணப் பத்திரிக்கையின் மூலமாகத்தான் அறிய வேண்டியிருக்கிறது.

இதைவிடத் தமிழர்களுக்கு வேறு இழிவு வேண்டியதே இல்லை.

100-க்கு 90-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கூட்டத்தாருக்கு தங்கள் நாட்டில் தங்களைப் பற்றி தங்கள் சமூகத்தாரே அறிந்து கொள்ள ஒரு சாதனம் இல்லை என்றால் இதைப் பற்றி என்ன நினைப்பது?

– பெரியார் (குடிஅரசு, 02.08.1925)



# வாழ்த்துரை

– பேராசிரியர் சுப. வீரபாண்டியன்


## விரைந்து நீ சென்று சேர்க!

மங்கிடா உணர்வு கொண்டே
மானமும் அறிவும் பெற்றுப்
பொங்கிடும் புதிய ஊற்றாய்ப்
புறப்பட வேண்டும் நாடு!
வெங்காயம் என்னும் ஏடே
விரைந்து நீ இந்தப் பாரில்
எங்கெலாம் தமிழர் உண்டோ
அங்கெலாம் சென்று சேர்க!

– சுப.வீரபாண்டியன்

14.09.2020

# வெங்காயம்



‘வெங்காயம்’ என்ற சொல்லைக் கேட்டாலே இதுவரை பெரியார்தான் பலருக்கு ஞாபகம் வருவார்; இப்போது சிலருக்கு நிர்மலா சீதாராமன் ஞாபகம் வரலாம்.

ஆனால் இருவரும் வெங்காயம் என்ற சொல்லைப் பயன்படுத்தியது வெவ்வேறு காரணத்திற்காக.

பெரியார் தனது பேச்சில் அடிக்கடி வெங்காயம் என்ற சொல்லைப் பயன்படுத்துவார். அது ஏன் என்பதற்கு அவரே ஒரு விளக்கமும் கொடுத்திருக்கிறார்.

“வெங்காயம் என்றால் வித்து இல்லாதது; வெறும் சதை அச்சசொல்லின் பொருள்-வெறுங்காயம்; உயிரற்ற உடல்; விதை இல்லாதது; உரிக்க உரிக்கத் தோலாகவே-சதையாகவே வந்து முடிவில் சூனியமாய்-விதை இல்லாததன்மையதாய்-முடிவது என்பது. அது போன்றனவே, கடவுளும் மதமும் ஆகும். இச்சொற்களுக்கு இயற்கைப் பொருள்களே இல்லை. கற்பிக்கிறவர்கள் சொல்லும் பொருள்தான்”

ஆகவே மதம், கடவுள், சாதி இவையெல்லாம் வெறும் கற்பிதங்கள் அவற்றுக்குள் சாராம்சம் என எதுவும் இல்லை உரிக்க உரிக்க ஒன்றுமில்லாமல் செல்வது என்பதைக் குறிக்கவே அவர் அச்சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார்.

ஆனால் நிர்மலா சீதாராமன் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை ஏற்றம் பற்றிய கேள்விக்கு, “நான் வெங்காயம் பூண்டு சாப்பிடும் குடும்பத்திலிருந்து வரவில்லை” என்றார்.

நிர்மலா சீதாராமன் சார்ந்த பார்ப்பன சமூகம் உள்ளிட்ட பல உயர் சாதியினர் வெங்காயம், பூண்டு முதலியவற்றை உணவுகளில் சேர்ப்பதில்லை. ஏனெனில் அவை கீழ் சாதிகளுக்கு உரிய உணவாம், அதை சாப்பிட்டால் இவர்கள் சுத்தம் கெட்டுவிடுமாம் . உணவில் வெங்காயம் பூண்டு சேர்க்காத உணவுப் பழக்கத்தை அவர்கள் சொந்தமாக ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை, அது சமணர்களிடமிருந்து காப்பி அடித்தது. அதாவது எப்படி வேத காலத்தில் யாகம் என்ற பெயரில் பசுக்களைக் கொன்று தந்தூரி போட்டுச் சாப்பிட்ட இந்த மகா உத்தமர்கள் பௌத்தத்தின் எழுச்சிக்குப் பின்னர் தங்களை உயர்ந்த சமூகமாகக் காட்டிக் கொள்வதற்கு, அதிதூய்மையானவர்கள் என்று நிறுவுவதற்கு மாட்டுக்கறி உண்பதை தவிர்த்தார்களோ, அதேபோல்தான் தங்கள் சாதிய மேலாதிக்கத்தை நிறுவுவதற்குச் சமணர்களின் உணவுப் பழக்கத்தை ஏற்றுக் கொண்டதும்.

காய்கறிக்குக் கூட சாதிச் சாயம் பூசி ஒரு வகுப்பு ஒதுக்கி வைத்தாலும் வெங்காயம் இன்று கோடிக்கணக்கான உழைக்கும் பெரும்பான்மை மக்களின் அன்றாட உணவுப் பொருளாகவும், எதிர்ப்பு சக்தி வழங்கி அவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் உணவாகவும் இருந்து வருகிறது.

சரி நமது கதைக்கு வருவோம்; நாம் இந்த மாத இதழுக்கு வெங்காயம் என்று பெயர் வைத்ததற்கான காரணங்கள்.

ஒன்று இந்த இதழில் கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு, சிறுகதை எதுவாக இருந்தாலும் அதன் உட்பொருள் சமத்துவத்திற்கு எதிராகக் கட்டமைக்கப்பட்டுள்ள சாதி, மதம், கடவுள், சமத்துவத்திற்கு எதிரான தேசியம், ஆட்சி அதிகாரம் எதுவாக இருந்தாலும் சமரசம் இன்றி அதனைத் தோலுரித்து அவை உள்ளீடற்றவை என்று நிறுவுவதாக அமையும்.

பெரியாரியலை உருவாக்கியவர்கள் உணர்ந்திருக்கக்கூடிய கருத்து ‘பார்ப்பனர்கள் எதையெல்லாம் நல்லது என்று சொல்கிறார்களோ அவை நமக்குத் தீமையானதாகவே இருக்கும், அதேசமயம் அவர்கள் எதையெல்லாம் தீயது என்ற பிரச்சாரம் செய்கிறார்களோ, ஒதுக்குகிறார்களோ அது நமக்கு நன்மை தரக்கூடியதாக இருக்கும்’. எனவே இவ்விதழின் மற்றொரு நோக்கம் ஆதிக்க சக்திகளால் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவ, சுயநலத்திற்காக திட்டமிட்டு இருட்டடிப்பு செய்யப்படும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மையின உழைக்கும் மக்கள், பெண்கள் ஆகியோரின் சமூக, அரசியல், பொருளாதார மேம்பாட்டிற்காக, வெங்காயத்தைப் போன்ற அவசியமான ஆரோக்கியமான கருத்துக்களை, செய்திகளை அவர்களிடம் சரியாகக் கொண்டு சேர்ப்பது ஆகியவையாகும்.

உலகம் முழுவதும் சமூக, பொருளாதார சமத்துவம் என்ற இலட்சியத்தை அடைவதற்காகப் பல கோடி பேர் தங்களால் இயன்ற அளவில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். எங்களின் இந்த மாத இதழும் அத்தகைய முயற்சியின் ஒரு சிறு துளியே. எங்களின் முன்னெடுப்பு தொடர்வதற்கு உங்கள் அனைவரின் ஆதரவையும், ஊக்கத்தையும் வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு

# அம்பேத்கரின் பவுத்த ஜனநாயகம்

✒ சரவணப்பெருமாள்



சனாதன இந்தியாவைத் தனது அறிவாற்றல் மூலம் ஜனநாயக இந்தியாவாக மீள் கட்டுமானம் செய்ததில் புரட்சியாளர் அம்பேத்கரின் பங்கு அளப்பரியது. பார்ப்பனியத்துக்கும் பவுத்தத்துக்கும் இடையேயான போராட்டமே இந்திய வரலாறு என்பதை நிறுவி இந்திய வரலாற்றுத் தடத்தில் புதிய திருப்புமுனையை உண்டு பண்ணியவர் அவர். இன்று நாம் கண்டு வரும் பார்ப்பனியத்துக்கும் ஜனநாயகத்துக்குமான போராட்டம் என்பதுகூட இந்த வரலாற்றின் தொடர்ச்சிதான். இங்கு ஜனநாயகத்தின் இடத்தில் பவுத்தத்தைத் பொருத்துகிறார் அம்பேத்கர்.

சமூகத் தளத்தில் இந்துக்கள் ஜனநாயகப்படாமல் இருப்பதற்குக் காரணம் அவர்கள் பின்பற்றி வரும் இந்துமதம்தான். சமத்துவமின்மையே இந்து மதத்தின் உள்ளடக்கம். பிறப்பின் அடிப்படையிலான ஏற்றத் தாழ்வைக் கற்பிக்கும் வர்ண முறையே அதன் அடியாதாரமான கோட்பாடு. ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்தக் கோட்பாட்டை உள்வாங்கிக் கொண்டிருக்கும் ஒரு (இந்து) சமூகத்திடம் நம்மால் எப்படிச் சமத்துவத்தை எதிர்பார்க்க முடியும்?

இந்து மதத்தில் தோன்றி மறைந்த சீர்திருத்தக்காரர்கள், மகாத்மாக்கள் எவரும் வர்ணக் கோட்பாட்டைத் தகர்க்க முற்பட்டவர்களாக இல்லை, காந்தியார் உட்பட! மூட நம்பிக்கையையும், பிற்போக்குத்தனத்தையும் எதிர்த்து மட்டுமே அவர்களால் கிளர்ச்சி செய்ய முடிந்தது. அதிகபட்சமாக அவர்களால் 'தீண்டாமை ஒழிப்பு' பேச முடிந்தது. அவ்வளவே.! தீண்டாமை என்பது வர்ண/ஜாதி அமைப்பு முறையின் விளைவுதான் என்பதையும், விளைவை எதிர்ப்பதை விடுத்துக் காரணத்தைத் (வர்ணம்/ஜாதி) தகர்ப்பதில்தான் முழுமையான தீர்வு அடங்கியுள்ளது என்பதையும் அவர்கள் உணர மறந்துவிட்டனர். அல்லது உணர்ந்தும் துணிச்சல் இன்றிப் பின்வாங்கி விட்டனர்.

வரலாற்றில் முதல்முறையாக வர்ணக் கோட்பாட்டை உறுதியாக எதிர்த்து நின்று போர் தொடுத்தவர் புத்தர். பவுத்தமும், சமணமும் வேத மதத்தின் வேள்விகளையும், உயிர்ப்பலிகளையும் எதிர்த்து நின்று அஹிம்சையை வலியுறுத்தின என்றாலும் வர்ணக் கோட்பாட்டை புத்தர் அளவுக்கு மகாவீரர் எதிர்த்து நிற்கவில்லை. பார்ப்பனியத்தின் வெறுப்பு புத்தர் மீதே அதிகம் படிந்திருந்தது. அந்த வெறுப்பு பார்ப்பனிய இலக்கியங்களில் வெளிப்பட்டது. இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் பவுத்த பிக்குகள் மிகவும் தரக்குறைவாகச் சித்தரிக்கப்பட்டார்கள். தீண்டாமைக்கான மூலகாரணங்களில் ஒன்றாக பவுத்தர்களின்பாலான வெறுப்பும் இருந்திருக்கக்கூடும் என்கிறார் அம்பேத்கர்.

புத்தர் பார்ப்பனியத்தை எதிர்த்ததோடு மட்டும் நில்லாமல் அதற்கு மாற்றாகச் சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும் உள்ளடக்கமாகக் கொண்ட ஒரு புதிய கோட்பாட்டை முன்வைக்கிறார். புத்தரின் கோட்பாடு பகுத்தறிவை, அறிவியலை அடிப்படையாக கொண்டது. மற்ற மதத் தலைவர்களிடம் இருந்து புத்தர் இங்குதான் வேறுபடுகிறார். தன் சொல்லே இறுதியானது என மற்றவர்கள் கூறி வருகையில், தான் சொல்லிவிட்டேன் என்பதற்காகவே ஒன்றைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றத் தேவை இல்லை எனக்கூறி, பகுத்தறிவுக்கும், சுதந்திரச் சிந்தனைக்கும் இடமளிக்கிறார் அவர். புத்தரின் பார்வையில், மதத்தின் நோக்கமானது ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதோடு தொடர்புடையது. மாறாகக் கடவுளை அடைவது மதத்தின் நோக்கமாகாது என்பதே புத்தரின் நிலைப்பாடு. அவர் ஆன்ம வாதத்தை மறுக்கிறார். பிறப்பின் அடிப்படையில் ஒரு மனிதனைத் தாழ்வாக நடத்தும் கயமைத்தனத்தை அவர் கடுமையாகச் சாடுகிறார். பார்ப்பனியத்தால் ஒடுக்கப்பட்ட பெண்களும், தாழ்த்தப்பட்ட ஜாதியினரும் சங்கத்தில் சேர்ந்து பிக்குகளாகும் உரிமையை வழங்குகிறார் புத்தர். புத்தரைப் பற்றிப் பொதுவாக நாம் அறிந்து வைத்திருக்கும் செய்திகளில் இருந்து விலகி அவரின் உண்மையான போதனைகளை அறிய முற்பட வேண்டும். சமூக வாழ்வை ஒழுங்கமைக்கும் மதமானது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், அறிவியல், பகுத்தறிவு ஆகிவற்றை வலியுறுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்சொன்ன விழுமியங்களை உள்ளடக்கியே பவுத்தம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

புத்தரைத் தனது அறிவொளி ஆசானாக ஏற்றுக்கொண்ட புரட்சியாளர் அம்பேத்கர் அவரின் பகுத்தறிவுக் கருத்துக்களை இந்திய அரசமைப்பின் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பினார். தன்னுடைய மதக் கருத்துக்களை காலச் சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளலாம் எனும் சுதந்திரத்தை வழங்குகிறார் புத்தர். புத்தரின் இதே கருத்தை ஒட்டியே அம்பேத்கரும் "இந்த அரசியல் சாசனம் தவறற்றது என்றோ, இறுதியானது என்றோ இந்தச்சபை முத்திரை குத்தவில்லை... அரசியல் சாசனத்தைத் திருத்துவதற்கு மிகவும் எளிதாக நடைமுறைகள் அளிக்கப்பட்டுள்ளன." என்கிறார். அரசமைப்புச் சட்டவரைவைச் சமர்ப்பித்து ஆற்றிய உரையில் நாடாளுமன்ற நடைமுறைகளைப் பவுத்த சங்கங்களோடு ஒப்பிடுகிறார். அந்த உரையின் சரிபாதி "சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம்" ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையிலே அமைந்திருந்தது. இந்தத் தத்துவத்தைப் புத்தரிடம் இருந்து பெற்றதாக அம்பேத்கர் வேறொரு இடத்தில் குறிப்பிடுகிறார். அரசியல் தளத்தில் ஜனநாயகத்தை வென்றெடுத்துவிட்ட நாம் "சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் சமத்துவத்தை எவ்வளவு காலம் மறுக்கப் போகிறோம்?" எனும் வலிமையான கேள்வியை முன்வைக்கிறார் அம்பேத்கர். அம்பேத்கரின் இந்தக் கேள்விக்கு நாம் இன்னும் நேர்மையான முறையில் பதில் அளிக்க முடியாதவர்களாகத்தான் இருக்கிறோம்.

பேராசான் புத்தரும், புரட்சியாளர் அம்பேத்கரும் சமூக சமத்துவத்தை நிலைநிறுத்தவே தங்களின் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர்கள். பவுத்தத்தை வழமையான மதங்களில் இருந்து வேறுபடுத்தி அதை ஜனநாயகத்தின் வடிவமாக நமக்கு அடையாளம் காட்டுகிறார் அம்பேத்கர். சமத்துவச் சமுதாயத்திற்கான அறவியல் கருத்துக்களைப் பவுத்தமே வழங்குகிறது என்பதே அம்பேத்கரின் துணிபு. ●

# எழுக திராவிடம்!

இக்லாஸ் உசேன்

சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் இம்மூன்றுமே ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமை என்று 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் தேசம் உலகுக்கே வழிகாட்டியது.

பிரான்ஸில் மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி மலர்ந்தபோது, நம் தமிழகத்தில் சனாதனக் கொள்கை என்கிற சமத்துவமற்ற, சகோதரத்துவமற்ற பார்ப்பனியம் ஆதிக்கம் செலுத்திகொண்டு இருந்தது.

சனாதனம் என்பது வெறும் நால்வருணப் பிரிவினை மட்டுமன்று, மனிதத்தன்மையற்ற மூடச்சமூகமாக மனிதர்களை மாற்றி வைத்த கொடுஞ் சித்தாந்தமே சனாதனம்.

சனாதனம் பெற்றெடுத்த பிசாசுகளாய் ஆயிரக்கணக்கான சாதிகள் நாடுமுழுக்க நடைபோட திக்கற்ற சமூகமாய் நம் சமூகம் வாழ்ந்த காலகட்டத்தில் தான், திராவிடச் சிந்தனை மலரத்தொடங்கியது.

திராவிடம் என்பது மொழியை, இனத்தைக் குறிக்கும் சொல்லாக மேற்கத்திய அறிஞர்கள் எல்லீஸ், ஹட்சன், கார்ல்டுவெல், ஜி.யு.போப் ஜே.எச்.நெல்சன், மவுண்ட் ஸ்டூவர்ட் போன்றோர் பயன்படுத்தி இருந்தாலும், திராவிடம் என்ற சொல்லுக்குச் சமூகநீதி அரசியல் அடையாளத்தை 19ஆம் நூற்றாண்டு இறுதியில் 1885இல் பண்டிதர் அயோத்திதாசர், ரெவரெண்ட் ஜான்ரத்தினம் இணைந்து திராவிடப் பாண்டியன் என்கிற இதழ் வெளியிட்டு அத்துடன் சமூக இயக்கமாக 'திராவிட மகாஜன சபை' என்கிற அமைப்பையும் உருவாக்கித் திராவிடம் என்பதைக் கருத்தியலாக்கினார்கள்.

பார்ப்பனியக் கருத்தியலுக்கு நேரெதிராகத் திராவிடக் கருத்தியல் கட்டமைக்கப்பட்டது அது 1908இல் கோவில்பட்டியில் தொடங்கப்பட்ட திராவிடர் கழகம் முதல், திராவிடர் மாணவர் விடுதி, திராவிடன் பத்திரிக்கை, திராவிடப் பள்ளி என்று சாதிபேதமற்ற பார்ப்பனரல்லாதோர் அனைவரையும் ஒன்றிணைக்கும் சொல்லாக தமிழகத்தில் வலம் வருகிறது திராவிடம்.

பெரியார் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறிப் பார்ப்பன ஆதிக்கத்தை ஒழிப்பதே என் முழுவேலை என்று அறிவித்துவிட்டுப் பார்ப்பனர்களுக்கு எதிரான வலுவான அமைப்பைக் கட்டமைக்கத் திராவிடத்தைப் பயன்படுத்தினார்“ஆரியர்கள் இந்நாட்டுக்குள் எப்போது வந்தார்களோ அப்போதே ஆரியர் Vs திராவிடர் போராட்டங்கள் தொடங்கிவிட்டன. ஆரிய வேதம், ஆரிய ஆதிக்கம், ஆரியப் பிரச்சார சபா, ஆரிய வர்ணாசிரம தர்மப் பிரச்சார சபா என்கிற ஆதிக்கம் எதுவரையில் இந்நாட்டில் இருக்குமோ அதுவரை நமது திராவிட முன்னேற்ற இயக்கம் இருந்துவர வேண்டியது தான்.

அத்துடன் மதம் என்று சொல்லிக்கொண்டு வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, ஆகமம், புராணம் முதலியவைகள் பேரால் ஆரியப் பிரச்சாரம் செய்து வரும் வரையில் திராவிடமும் இருந்துகொண்டே இருக்கும் என்று 26-6-1927இல் கோவில்பட்டியில் நடந்த 18வது திராவிடர் கழக மாநாட்டில் பெரியார் பேசினார்.” பார்ப்பனர்களை ஆரியர் என்ற சொற்களிலே பெரியார் அழைக்கிறார். அந்தக் காலகட்டத்தில் பார்ப்பனர்களும் தங்களை ஆரியர் என்றே அழைத்துக்கொண்டனர். ஆங்கில இந்து நாளேடு இந்தியாவை ஆரிய வர்த்தம் (ஆரிய தேசம்) என்றே எழுதிவந்தது. இதெல்லாம் பாசிச ஹிட்லர் நாங்கள் ஆரிய இனம், நாங்கள் தான் உயர்ந்தவர்கள், எங்கள் விந்தே உயர்ந்தது என்று சொல்லி உலகையே கொலைக்களமாக்கி, ஆரியன் என்றாலே ஆபத்தானவன் என்ற பார்வை உலகம் முழுக்க பரவியபோது நம் நாட்டு ஆரியர்கள் தங்களின் இன்னொரு பெயரான பிராமணன் என்ற சொற்களில் தங்களை அழைத்துகொண்டார்கள். பெரியாரோ பிராமணர் என்பதற்குப் பதில் அவர்களின் தொழிற்பெயரான பார்ப்பனர் என்று ஆரியர்களை அழைக்கத் தொடங்கினார்.



பெரியாரைப் பொருத்தவரை நாம் வேறு பார்ப்பனர் வேறு என்ற அடிப்படைச் சித்தாந்தமே அவர் அரசியலாக இருந்தது. பார்ப்பனரை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமே சாதி,மத, கடவுள்,சாஸ்திர புராணங்களின் தொல்லையில் இருந்தும்,கொடுமையில் இருந்தும் மக்களைக் காக்க முன்னேற்ற முடியும் என்பதே பெரியாரின் பார்வையாக இருந்தது.அத்துடன் பெரும்பான்மை மனித சமூகத்தின் குருட்டுப் பழக்கமாக இருந்துவந்த மூடநம்பிக்கைகள், பொருள்தெரியாத சடங்குகள், மதத்தின் பேரால் நடக்கும் வெறுப்பு பிரச்சாரங்கள், பொருளாதாரம் சார்ந்த ஏற்றத் தாழ்வுகள், ஆகியவற்றை அகற்றி மக்கள் யாவரும் ஒரே சமூகமாக சமத்துவமாக வாழ்வதை நோக்கிப் பரப்புரை செய்வதற்குத் திராவிடம் என்கிற கருத்திலைத் தன் ஆயுதமாகக் கையாண்டார்.

சாதியற்ற பார்ப்பனரல்லாதோர் கூட்டமைப்பைப் பார்ப்பனியத்திற்கு எதிராக வலுவாகக் கட்டமைத்துப் பெயருக்குப் பின்னால் இருந்த சாதிப்பட்டத்தை நீக்கி பார்ப்பனர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிக்குச் சாவுமணி அடித்தது பெரியாரின் திராவிடக் களச்செயல்பாடு. கல்வி, அரசு வேலைவாய்ப்பு, வகுப்புவாரியான பிரதிநிதித்துவம் (அ) இடப்பங்கீடு என்று இந்தச் சமூகத் தளத்தில் பார்ப்பனரல்லாதோர்க்கு மறுக்கப்பட்ட அனைத்தையும் போராடி அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கப் பெரியார் தன் வாழ்நாள் முழுக்கப் பயணப்பட்டார்.

சமூக மாற்றம், அரசியல் மாற்றத்திற்கு மட்டுமில்லாமல் பெண்கள் ஒன்றும் ஆணின் அடிமையல்லர் என்பதைப் பெண்களுக்கு உணர்த்தி பெண்களுக்கான உந்துசக்தியாகப் பெரியாரின் பேச்சும் செயலும் இருந்தன.இப்படி திராவிடத்தாலும், பெரியாராலும் நூற்றாண்டாகத் தமிழகத்தில் கட்டமைக்கப்பட்ட சமூகநீதியை இந்த 2020ஆம் ஆண்டில் இந்துத்துவ, பாசிச சக்திகளின் ஊடக பலத்தாலும், மதவெறுப்பு அரசியலாலும் சிதைந்துவிடாமல் நாம் காப்பற்றவேண்டும் என்றால் பெரியார் கையில் எடுத்த திராவிடக் கருத்தாக்கம் மீண்டும் தமிழகம் முழுக்கப் பரவவேண்டும்.

# திராவிடநாடு

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 2-4-50 | இதழ் 40




★

கடைசி மூச்சு காற்றில் கலக்கும்வரை அவருடைய இதயத்தை விட்டு இலட்சியப் பணி குறித்த ஆசை அடங்கியதில்லை. அம்மாவீரர் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, தலைமை தாங்கி நடத்தி வரும் தமிழர் பெரும் படையின் காட்சி! 1938-ல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் போது திருச்சியிலிருந்து புறப்பட்டுக்கால் நடையாகவே சென்னை சேர்ந்த தமிழர் படையுடன் தளபதி அழகிரி காஞ்சி வந்து சேர்ந்த காட்சி இது!

★

**1938-இல் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது, அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி தலைமையில், திருச்சியிலிருந்து சென்னைக்குக் கால்நடையாகவே வந்து சேர்ந்த தமிழர் பெரும்படை!! (திராவிட நாடு, 02.04.1950)**

# அண்ணா அரசியல் அதிகாரம்!

✒ குண. சந்திரசேகர்



‘அதிகாரம்’ என்பதைப் பற்றி உலக அளவில் இரண்டு வகையான சிந்தனை மரபுகள் உள்ளன. ஒன்று மேக்ஸ் வெபர் கூறுவது போல ‘அதிகாரமென்பதை ஒரு தனி நபரோ அல்லது சிறு குழுவோ தனது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான செயல்பாட்டில் ஒட்டுமொத்த சமூகத்தையே ஈடுபடச் செய்வதற்கான கருவி’ என்கிறது. அதாவது ஆதிக்க வர்க்கத்தின் நலன் காக்கவே அதிகாரம் பயன்படும் என்கிறது இந்தத் தரப்பு.

மற்றொரு வகையான சிந்தனைப் போக்கு, அதிகாரம் என்பது ஏதோ சிலருக்கு மட்டுமே உரியது அன்று, அது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் உரியது என்கிறது.

ஒரு சமூகத்தில் உருவாகின்ற உயரிய விழுமியங்கள், ஒரு கூட்டு இலட்சியத்தை உருவாக்கும். அச்சமூகத்தின் விழுமியங்கள் மற்றும் இலட்சியங்களின் அடிப்படையில் அதனை முன்னேற்றுகிறோம் என வாக்குறுதி வழங்கும் அரசியல் கட்சியிடம் தன்னை வழிநடத்திச் செல்லும் அதிகாரத்தை அச்சமூகம் வழங்குகிறது. அதன்மூலம் அச்சமூகமே அதிகாரம் மிக்கதாக மாறுகிறது.

உதாரணமாக மேற்கத்திய நாடுகள் பொருள்முதல்வாதத்தைத் தங்கள் விழுமியமாகவும், பொருளாதார முன்னேற்றத்தை இலட்சியமாகவும் கொண்டு இருந்ததால் அதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆட்சியாளர்களிடம் அதிகாரத்தை வழங்கி இன்று அதிகாரமிக்க முன்னேறிய சமூகங்களாக மாறின.

சரியான விழுமியங்கள், உயர்வான கூட்டு இலட்சியம் நிலவுகின்ற ஒரு ஜனநாயக நாட்டில் ஆட்சியியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் என்பது வங்கியில் உள்ள வைப்பு நிதியைப் போன்றது. மக்கள் வாடிக்கையாளர்களைப் போன்றவர்கள். வங்கியின் மீது நம்பிக்கை இழந்தால் வாடிக்கையாளர்கள் தங்களின் வைப்பு நிதியைத் திருப்பி எடுத்துக் கொள்வது போன்று, ஆட்சியாளர்களின் மீது நம்பிக்கை இழந்தால் தேர்தல் மூலம் மக்கள் அவர்கள் வழங்கிய அதிகாரங்களை மீண்டும் எடுத்துக் கொள்வார்கள்.

இந்த இரண்டாவது வகைச் சிந்தனைப் போக்கின் சாராம்சம், அதிகாரம் சமூக மேம்பாட்டிற்காகவும் பயன்படக்கூடும் என்பதாகும். இந்த இருவேறு வாதங்களில் இதுதான் சரி என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. இரண்டு தரப்புக்கும் நியாயம் கற்பிக்கக் கூடிய உதாரணங்கள் இருக்கவே செய்கின்றன. கடந்த இரண்டாயிரம் ஆண்டு கால இந்திய வரலாறு முதல் தரப்பிற்கான சரியான எடுத்துக்காட்டு. ஏனெனில் இங்கு அதிகாரம் என்பது உயர்சாதி என்கிற சிறு குழுவின் நலனைக் காக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

அதே சமயம் இந்திய சமூகப் பரப்பில் அதிகாரம் என்பது சமூக மேம்பாட்டிற்காகவும் பயன்படக் கூடும் என்கிற மற்றொரு தரப்பிற்கு நியாயம் கற்பிக்கும் விதத்தில் தேர்தல் அரசியலில் களம் புகுந்தவர் அறிஞர் அண்ணா.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகச் சாதி என்னும் இருட்டறையில் கட்டுண்டு கிடந்த தமிழர்களின் வாழ்வில் பகுத்தறிவு ஒளி வீசி, சுயமரியாதை உணர்வூட்டி, சமத்துவ சமூகத்திற்கான உயர்ந்த விழுமியத்தை விதைத்தவர் தந்தை பெரியார். அவர் உருவாக்கிய இலட்சியம் நோக்கிய பயணத்தை வழிநடத்த, தமிழ்ச் சமூகத்தால் தங்கள் நம்பிக்கையை, அதிகாரத்தை முதலீடு செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் அறிஞர் அண்ணா.

ஆனால், அறிஞர் அண்ணா சமூக சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை தராமல் அரசியல் சீர்திருத்தத்திற்கு முன்னுரிமை தந்து விட்டார் என இன்றளவும் விமர்சிக்கப்படுகிறார். அரசியல் சீர்திருத்தமா? சமூக சீர்திருத்தமா? என்ற விவாதத்தை வறட்டுத்தனமான ஒன்று என்று விமர்சிக்கிறார் அண்ணல் அம்பேத்கர். அவர் கூறுவதாவது: “ஒரு சமூகம் வளர்ச்சி பெறவும் முன்னேற்றம் அடையவும் பல்வேறு வழிமுறைகளைக் கையாள வேண்டியிருக்கும். ஒவ்வொரு வழிமுறைக்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கும். அவற்றை நடைமுறைப்படுத்தும்போது முதலில் இது, அடுத்தது இது என்றெல்லாம் வரிசைப்படுத்த முடியாது” (நான் இந்துவாக சாகமாட்டேன், 5ஆம் பதிப்பு, பக்கம் 66).

அம்பேத்கர் தன்னளவில் சமூக மாற்றத்திற்குத்தான் முதலிடம் கொடுப்பேன் என்று கூறியிருந்தாலும் மற்ற தளங்களிலும் தொடர்ந்து மாற்றத்திற்கான செயல்பாடுகள் நடைபெற வேண்டும் என்பதில் உறுதி காட்டுகிறார். நிலச்சுவான்தார்களும், சாஸ்திரிகளும், ஆச்சாரியார்களும் அரசியலில் கோலோச்சிய காலகட்டத்தில், தந்தை பெரியார் சமூக தளத்தில் சாமானிய மக்களுக்குள் விதைத்த சமத்துவ இலட்சியத்தை அரசியல் தளத்திலும் முன்னெடுத்துச் செல்வதற்கான வெற்றிடம் இருக்கவே, அதன் முக்கியத்துவம் உணர்ந்து அப்பொறுப்பை ஏற்பதற்காக, பெரியாரிடமே முரண்பட்டுத் தனி இயக்கம் கண்டவர் அண்ணா.

அதுவரை இருந்த அரசியல் தலைவர்கள் போல நான்தான் உங்களைக் காப்பாற்ற முடியும் என்ற தொனியில் மக்களைத் தனக்கு ஆதரவளிக்க வற்புறுத்தியவரில்லை அண்ணா. மக்களிடமிருந்து கற்று, அவர்களிடமிருந்து இயக்கத்தைக் கட்டமைத்து, சாமானிய மக்களின் பிரதிநிதியாகவே தன்னை நிறுவிக் கொண்டார்.

அரசியல் தளத்தில் எங்கெல்லாம் அதிகாரம் குவிக்கப்பட்டுள்ளதோ அத்தனையும் தகர்த்துப் பரவலாக்க ஓங்கி ஒலித்தது அவரது குரல். அதிகாரத்தைச் சாமானிய மக்களுக்கும் நெருக்கமானதாகக் கொண்டுவர அவர் முன்மொழிந்த வழிமுறைகள்தான் மத்திய அரசின் அதிகாரத்தை எதிர்க்கும் மாநில சுயாட்சி கோரிக்கை, இருமொழிக் கொள்கை, நிலச் சீர்திருத்தத்திற்கான அவரது ஆதரவு, சமூக நலத் திட்டத்திற்கு அவர் கொடுத்த முக்கியத்துவம் ஆகியவையெல்லாம்.

தொடர்ச்சி 8ஆம் பக்கம் →

# அம்பேத்கர் - பெரியார் படிப்பகம்

ஒற்றன்

சமூக நீதி சார்ந்த சிந்தனைகளை இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டியது இன்று நமது முன்னால் இருக்கும் தலையாய பணி. முக்கியமாக, கிராமங்களில் அத்தகைய பணிகள் இன்றியமையாதவை. அந்த முயற்சியில் திருநெல்வேலி மாவட்டம், தெற்கு புலிமான்குளம் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். கடந்த 25.08.2020 அன்று, கிராம மக்களின் ஒத்துழைப்புடன் ‘அம்பேத்கர் - பெரியார் படிப்பகம்’ தொடங்கப்பட்டுள்ளது. படிப்பகத்திற்காகக் கருஞ்சட்டைப் பதிப்பகத்திலிருந்தும், தலித் முரசு இதழிலிருந்தும் நன்கொடையாகப் புத்தகங்கள் அனுப்பப்பட்டன. புத்தக வாசிப்போடு நின்று விடாமல், அம்பேத்கரிய-பெரியாரியச் சிந்தனைகளைக் கொண்டு செல்ல மாணவர்களிடையே பேச்சுப்போட்டி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. வெங்காயம் இதழ் சார்பாக நமது வாழ்த்துக்கள்!






**இது போல, உங்கள் கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் முயற்சிகளை ‘வெங்காயம்’ இதழுக்கு அனுப்பலாம்.**

7 ஆம் பக்கம் தொடர்ச்சி ➔

மக்கள் மன்றம், சட்டமன்றம், நாடாளுமன்றம் என அவர் தடம் பதித்த அத்தனை இடங்களிலும் அதிகாரக் குவிப்பை அடித்து நொறுக்கும் வேலையையே செய்தார் அண்ணா.

நாடாளுமன்றத்தில் தனது முதல் பேச்சிலேயே,

‘தேசம் என்றால் என்ன என்ற மறுசிந்தனைக்கு மறுமதிப்பீடு, மறு வியாக்கியானங்களுக்கான நேரம் வந்துவிட்டது’ என்று பேசி நாடெங்கும் அதிர்வலைகளைக் கிளப்பியதும்,

முதல்முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதே ‘சட்டத்தின் மூலம் மட்டும் தேசிய கௌரவத்தை நிலைநிறுத்திட முடியாது’ என முழங்கியதும்,

சாதி, மதம், தேசியம் என எந்த வடிவத்தில் ஆதிக்கம் திணிக்கப்பட்டாலும் அவற்றைத் தகர்த்தெறியும் பெரியாரின் சுயமரியாதை, சமூகநீதிக் கொள்கை வழங்கிய உந்துவிசையால்தான். இன்று தமிழ்நாடு இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் இருந்து வேறுபட்டு அனைவரையும் உள்ளடக்கிய ஜனநாயகத் தன்மை வாய்ந்த வளர்ச்சிப் பாதையில் பயணிக்க அதுவே காரணம்.

காஞ்சிபுரத்தில் எளிய நெசவுக் குடும்பத்தில் பிறந்த அண்ணாதுரை என்னும் அந்தச் சிறிய உருவம் அதுவரை தமிழக ஆட்சி அதிகாரத்தில் கோலோச்சிய பார்ப்பனிய ஆதிக்கத்தை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்தது என்பது அதிகாரத்தின் மீது உள்ள ஆசையால் அன்று, சமூகநீதிக் கொள்கையை அரசியல் அரியணை ஏற்ற வேண்டிய வேண்டிய வரலாற்றுத் தேவையை மக்களிடம் கொண்டு சென்று அவர்களின் நம்பிக்கையை மூலதனமாகப் பெற்றதனால்தான். அவரது தலைமையிலான இயக்கம் பெற்ற அதிகாரம் என்பது சாமானியனின் அதிகாரம்.

தனக்குக் கிடைத்த அதிகாரம் என்பது ஒட்டுமொத்த உழைக்கும் சமூகத்திற்கான அதிகாரம் என்பதையும் உணர்ந்ததாலோ என்னவோ அவர்

“அண்ணாதுரை கொண்டு வந்தவற்றை எல்லாம் மாற்ற வேண்டும் என்று எண்ணும் போதே மக்கள் வெகுண்டு எழுவார்களே! என்ற அச்சமும் கூடவே வரும் இல்லையா? அந்த அச்சம் இருக்கிற வரையில் இங்கே யார் ஆண்டாலும் அண்ணாதுரைதான் இந்த நாட்டை ஆள்கிறான் என்று பொருள்!” எனத் துணிந்து சொன்னார்.

தமிழ்ச் சமூகத்தில் பகுத்தறிவு, சுயமரியாதை, சமூகநீதி என்னும் உயரிய லட்சியங்களை விதைத்த பெரியார் என்னும் அடிக்கட்டுமானம் மீதுதான். அண்ணா ஆட்சி அதிகாரத்தை கட்டியெழுப்பினார்.

அண்ணா வகுத்த வழியில் பெரியார் விதைத்த லட்சியங்களில் இருந்து வழுவாமல், தனக்குக் கிடைத்த அதிகாரம் ஒவ்வொரு சாமானிய மக்களின் அதிகாரம் என்பதை இன்றைய ஆட்சியாளர்களும், ஆட்சிக்கு வர விரும்புபவர்களும் மறப்பார்களேயானால், தமிழ்ச் சமூகம் தங்கள் நம்பிக்கையின் மூலம் அவர்களுக்கு வழங்கிய அதிகாரத்தை திரும்பப் பெற்றுக் கொள்ளும், மீண்டுமொரு அண்ணா உருவாகும் வரை.

# சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

## (EIA-Environmental Impact Assessment) என்றால் என்ன?

### பூவுலகின் நண்பர்கள்

இந்தியாவில் பெருநிறுவனங்கள், தொழிற்சாலைகள் அல்லது வளர்ச்சி திட்டங்களைத் தொடங்க வேண்டுமென்றால் சுற்றுச்சூழல் சட்டம் 1986ன் கீழ் அனுமதி பெற வேண்டும். ஒரு தொழிற்சாலைக்கோ, திட்டத்திற்கோ சூழலியல் அனுமதி வாங்க வேண்டும் என்றால் அந்தத் திட்டம் சுற்றுச்சூழலின் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை ஆராய்ந்து அதை அறிக்கையாக அரசுக்கு அந்த நிறுவனம் சமர்ப்பிக்க வேண்டும்.

இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால் உங்கள் குடியிருப்புப் பகுதிக்கு அருகே ஒரு ரசாயன நிறுவனம் கட்டப்படவிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த தொழிற்சாலை அமையவுள்ள இடம், பரப்பளவு, அதிலிருந்து வெளியேறும் கழிவுகளின் அளவு மற்றும் கழிவின் தன்மை, அதனால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகள், அருகாமையில் வசிக்கும் மக்களின் உடல்நிலையில் அது ஏற்படுத்தப் போகும் பாதிப்புகள், மக்களின் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்தும் பாதிப்புகள் இவற்றோடு சூழலியல் பாதிப்புகளைக் களைய சூழலியல் மேலாண்மைத் திட்டம் (EMP-Environmental Management Plan), பாதிப்புகளை குறைக்க தணிப்பு நடவடிக்கைகள் (Mitigation Measures), போன்றவற்றை விரிவான ஆய்வு செய்து பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனம் தனது சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டில் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசு சார்பில் அமைக்கபெற்ற நிபுணர் குழு அதை ஆய்வு செய்து சுற்றுசூழலுக்கு ஆபத்து இல்லாத திட்டமாக இருப்பின் அனுமதி வழங்கவோ, இல்லாத பட்சத்தில் அனுமதி மறுக்கவோ செய்யும்.

சூழலியல் அனுமதி பெற தற்பொழுது இருக்கும் EIA 2006 Notification இல் உள்ள நடைமுறைகள் பின்வருமாறு:

தற்பொழுது இருக்கும் 2006 EIA வழிகாட்டுதலின்படி படி தொழிற்சாலைகள் மற்றும் வளர்ச்சி திட்டங்கள் A பிரிவு மற்றும் B பிரிவு என்று இரண்டு பிரிவுகளாக பிரிக்கபட்டிருக்கின்றன.

A பிரிவுத் திட்டங்கள்: அணுமின் நிலையங்கள், பெட்ரோல் சுத்திகரிப்பு & பெட்ரோகெமிகல் நிறுவனங்கள், இரசாயன உரம் மற்றும் பூச்சிக்கொல்லி தயாரிக்கும் நிறுவனங்கள், எரிவாயு குழாய் பதிப்பு, பெரிய அளவிலான சுரங்கப் பணிகள், நிலத்தடி எண்ணை-எரிவாயு-நிலக்கரிப் படுகை மீத்தேன் எடுக்கும் திட்டங்கள் உட்பட முக்கியத்துவம் வாய்ந்த, அதேநேரத்தில் சூழலுக்கு அதிகம் கேடு விளைவிக்கக்கூடியத் திட்டங்கள் A பிரிவுத் திட்டங்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

B பிரிவுத் திட்டங்கள்: 50 ஹெக்டேர்ருக்குக் குறைவான சுரங்கப் பணிகள், 500MW திறனுக்கு உட்பட்ட அனல் மின்நிலையங்கள், சக்கரை ஆலைகள், சிமெண்ட் ஆலைகள், 500 ஹெக்டேர்கள் பரப்பளவிற்குள் இருக்கும் தொழில் மண்டலங்களில் இயங்கும் தொழிற்சாலைகள் முதலிய திட்டங்கள் B பிரிவுத் திட்டங்கள் என வரையறை செய்யபட்டிருக்கின்றன.

இவற்றில் A பிரிவுத் திட்டங்களுக்கு மத்திய நிபுணர் குழுவும் (EAC - Environmental Appraisal Committee) B பிரிவுத் திட்டங்களுக்கு மாநில நிபுணர் குழுவும் (SEAC-State Environmental Impact Assessment Committee) மதிப்பீடு செய்து அனுமதி வழங்கும்.

A, B எந்தப் பிரிவாக இருந்தாலும்சரி அனைத்துத் திட்டங்களுக்கும் சூழலியல் தாக்க மதிப்பீடும் (EIA) மற்றும் பொதுமக்கள் கருத்துக்கேட்பும் 2006 EIA வில் அவசியமாக இருக்கின்றன.

2. EIA 2020 புதிய வரைவில் திட்ட வகைப்பாட்டில் (Project Category) செய்யப்பட்டிருக்கும் மாற்றங்கள் என்ன?

தற்போது அரசு கொண்டுவந்திருக்கும் புதிய வரைவில் திட்டங்கள் A, B1, B2 என மூன்று பிரிவுத் திட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இதன் படி,

- A பிரிவுத் திட்டங்களை, மத்திய நிபுணர் குழு மதிப்பீடு செய்து அனுமதி வழங்கும், இதற்கு EIA ஆய்வறிக்கை மற்றும் மக்கள் கருத்துகேட்பு அவசியம்.
- B1 பிரிவுத் திட்டங்களுக்கு சூழல் தாக்க மதிப்பீடு (EIA) மற்றும் பொதுமக்கள் கருத்துக் கேட்பு அவசியம். ஆனால் மாநில நிபுணர் குழு மதிப்பீடு செய்து அனுமதி வழங்கும்.
- B2 பிரிவுத் திட்டங்களை மாநில நிபுணர் குழு மதிப்பீடு செய்து அனுமதி வழங்கும். ஆனால் இதற்கு EIA ஆய்வறிக்கையோ, பொதுமக்கள் கருத்துக் கேட்போ தேவையில்லை என்று வரையறை செய்யப்பட்டுள்ளது (பத்தி 5.6).

### பொதுமக்கள் கருத்துக்கேட்பும் சூழல் தாக்க அறிக்கையும் அவசியமில்லை:

முந்தைய சட்டத்தில் சூழலியல் தாக்க மதிப்பீடும், பொதுமக்கள் கருத்துக் கேட்பும் அவசியமாக இருந்த 25 சிவப்பு மற்றும் ஆரஞ்சு வகை நிறுவனகளை தற்பொழுது B2 பிரிவுக்கு மாற்றியிருப்பதன் மூலம் அவைகளைத் தொடங்குவதற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்போ, சூழலியல் தாக்க மதிப்பீடோ செய்ய வேண்டியதில்லை என்கிறது இந்த புதிய வரைவு.

இந்த புதிய வரையறையின் படி B2 பிரிவில் குறிப்பிடபட்டிருக்கும் கனிமசுரங்க பணிகள் (5 ஹெக்டேர்கள் வரை), 100KM வரையிலான சாலை விரிவாக்க பணிகள், உள்நாட்டு நீர் வழிகள், நீர்ப்பாசன நவீனமயமாக்கல் (Modernization), அனைத்துக் கட்டுமானம் மற்றும் நகரியத் திட்டங்கள் (Township projects), அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள், சிமெண்ட் ஆலைகள், 25MW அளவிலான புனல் மின்சாரத் திட்டங்கள், தொழிற்பேட்டைகளில் (Industrial Estates) இயங்கும் தோல்த் தொழிற்சாலைகள் மற்றும் முக்கியமாக நீருக்கடியிலும் பூமிக்கடியிலும் இருக்கும் எரிவாயு-நிலக்கரி-எண்ணை வளங்கள்-நிலக்கரி படிம மீதேன் எடுத்தல் (off shore and onshore oil & gas including Coal bed methane and shale gas exploration) ஆகிய திட்டங்களுக்கு EIA வும் கருத்துகேட்பும் அவசியமில்லை (அட்டவணை பக்கம் 123).

தமிழ்நாட்டு மக்களுக்கு புரியும்படி சொல்லவேண்டுமென்றால் கடலூரில் இருந்து ராமநாதபுரம் வரை காவிரி படுகையில் நிலத்தடியிலும் நீருக்கடியிலும் இவர்கள் போடப் போகும் ஆயிரக்கணக்கான ஹைட்ரோகார்பன் கிணறுகளுக்கான அனுமதியைப் பெற பொது மக்கள் கருத்துக்கேட்போ, சூழலியல் தாக்க மதிப்பீடோ தேவையில்லை. கடந்த ஜனவரி மாதம் இவர்கள் கொண்டுவந்த சட்ட திருத்தமும் தற்பொழுது கொண்டுவந்திருக்கும் EIA2020 வரைவும் இதையேதான் சொல்கிறது.

## விலக்ககளிக்கப்பட்ட ஆபத்தான திட்டங்கள்:

நிலத்தடியிலிருந்து எடுக்கப்படும் ஹைட்ரோ கார்பனை சுத்திகரிக்கும் தொழிற்சாலையையும் *(development production and transportation of gas including shale gas and Coal bed methane)*, எண்ணை வளங்களை சுத்திகரிக்கும் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலையையும்விட *(Petroleum refining industries)* அதை நிலத்தடியில் இருந்து எடுக்கும் *(exploration)* நீரியல் விரிசல் *(Fracking)* முறையே மிகவும் ஆபத்தானது. எடுக்கப்படும் எரிவாயு மற்றும் எண்ணை வளங்களைச் சுத்திகரிக்கும் நிறுவனங்களைத் துவங்க சூழலியல் தாக்க மதிப்பீடும், பொதுமக்கள் கருத்துக் கேட்ப்பும் அவசியம் என்று சொல்லி A பிரிவில் வைத்துவிட்டு, மிகவும் ஆபத்தான பூமிக்கடியில் இருந்து எரிவாயு-நிலக்கரி-எண்ணை வளங்கள்-நிலக்கரிப் படுகை மீத்தேன் எடுப்பதற்கு EIA & மக்கள் கருத்துகேட்பு தேவை இல்லை என்று B2 பிரிவில் சேர்த்திருப்பது முரண்பாட்டின் உச்சம்.

## ஜனநாயக உரிமை மறுப்பு:

மக்கள் எவ்வளவு எதிர்ப்பு தெரிவித்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் EIA 2020 சட்டத்தின் அடிப்படையில் சட்டப்படி(!) திட்டத்தை அமல்படுத்தும் முழு அதிகாரத்தை அரசு பெறுகிறது. இத்திட்டங்களுக்கு சூழலியல் அனுமதி கொடுக்க கூடாது என்று வலியுறுத்தி தனி நபரோ அல்லது அமைப்புகளோ இயக்கங்களோ நீதி மன்றம் செல்லமுடியாதபடி புதிய வரைவில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக தேச நலன், பாதுகாப்புச் சார்ந்த திட்டங்கள் *(projects concerning national defense and security or involving other strategic considerations)* மற்றும் கடலில் 12 நாட்டிக்கல் மைல் தொலைவில் செயல்படுத்தும் திட்டங்கள் ஆகியவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்தவோ, பொதுமக்கள் கருத்துக் கேட்போத் தேவையில்லை என்றும் சொல்கிறது புதிய வரைவு. இந்த வரையறையின் கீழ், கடல்வளத்தை அழிக்கும் சாகர்மாலா திட்டமும், நாட்டின் லட்சிய திட்டமாக பா.ஜ.க அரசால் கருதப்படும் பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின் கீழ் வரும் எட்டு வழி சாலை திட்டமும், தமிழகத்தை இராணுவ கேந்திரமாக்கும் திட்டமும், ஏன் நம் மலை வளத்தை நாசமாக்கத் துடிக்கும் நியூட்ரினோத் திட்டமும் கூட இதன் அடிப்படையில் மக்கள் கருத்துக்கேட்பு இல்லாமல் நடைமுறைப் படுத்தப்பட்ட வாய்ப்பிருக்கிறது.

இதே போன்று இந்திய எல்லைப் பகுதிகளில் இருந்து 100km வான் தூரம் *(aerial distance)* வரையிலான நிலப்பகுதிகளில் வர இருக்கும் தேசிய நெடுஞ்சாலை, குழாய் பதிப்புத் திட்டங்களுக்கு கருத்துக் கேட்புத் தேவையில்லை என்று புதிய EIA வரைவில் பத்தி 14.2 இல் குறிப்பிட்டிருப்பது, குறிப்பாக வட கிழக்கு மாநிலங்களில் வாழும் மக்களுக்கு அவர்களின் இயற்கை வளங்ளையும் வாழ்வாதாரத்தையும் கடுமையாக அச்சுறுத்தும் ஒன்றாகப் பார்க்கவேண்டியிருக்கிறது.

அதே போல் பெரிய அளவிலான சூரிய ஆற்றலில் மின்சாரம் உற்பத்தி செய்யும் சோலார் பூங்கா திட்டங்களுக்கு EIA வில் இருந்தும் மக்கள் கருத்துக்கேட்பில் இருந்து விலக்களித்திருக்கிறது புதிய வரைவு (பத்தி 26.14). புதுப்பிக்கத்தக்க மின்சாரமாக இருப்பினும் மையப்படுத்தப்படாத மின்சக்தியே வேண்டுமென்று சூழலியலாளர்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கும் நிலையில் இது போன்ற பெரியளவிலான சூரிய மின்சார திட்டங்களுக்கு அதிகப்படியான விவசாய நிலங்களே கையகப்படுத்தப்படும். ராமநாதபுரத்தில் அதானி துவங்க இருக்கும் 4500கோடி ரூபாய் சூரிய ஆற்றல் மின்சார உற்பத்தி திட்டத்திற்காக விவசாய நிலங்கள் கையகப் படுத்துவதை எதிர்த்து அப்பகுதி விவசாயிகள் போராடி வருவது இங்கே குறிப்பிடத்தக்கது.

## ஆபத்தான தொழிற்சாலைகளுக்கு வரவேற்பு:

பூச்சிக் கொல்லி தயாரிக்கும் தொழிற்சாலைகளை A பிரிவில் இருந்து B1 பிரிவுக்கு மாற்றியதன் மூலம் சூழலியல் பாதுகாப்பு முக்கியத்துவம் வெகுவாக குறைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவின் மிக மோசமான தொழிற்சாலை விபத்தான போபால் விஷவாயு பேரிடர் நடந்த யூனியன் கார்பைடு நிறுவனம் ஒரு பூச்சிக்கொல்லி தயாரிக்கும் நிறுவனம் என்பதனை இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது.

ஏற்கனவே செயல்பாட்டில் இருக்கும் தொழிற்சாலைகள் கூடுதல் விரிவாக்கம் செய்யவோ அல்லது தங்களது உற்பத்தி முறையினை நவீனபடுத்துவதாக இருந்தாலோ அந்த மாறுதல் மொத்த உற்பத்தியில் 50% க்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் அந்த விரிவாக்கத்திற்கான சூழலியல் அனுமதி பெற மக்கள் கருத்துக் கேட்பு தேவையில்லை என்று புதிய வரைவின் பத்தி 16.1 சொல்கிறது. எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால் ஏற்கனவே மக்களையும் சூழலையும் பாதித்துக் கொண்டிருக்கும் Sterlite ஆலை விரிவாக்கம் செய்து கூடுதலாக உற்பத்தி செய்வதாக இருந்தால் அதற்கு மக்கள் கருத்துக் கேட்பு இல்லாமலே விரிவாக்கத்திற்கான அனுமதி வழங்கப்படும்.

●

வெங்காயம்

ஆசிரியர்
**வெற்றிச்செல்வன்**

இணை ஆசிரியர்
**இக்லாஸ் உசேன்**
**குண. சந்திரசேகர்**

முகநூலில் தொடர:
**https://www.facebook.com/vengaayam2020/**

வலைப்பூ:
http://vengaayam2020.wordpress.com

தொடர்புக்கு:
vengaayam.magazine@gmail.com



# அரசும் புரட்சியும் நூலிலிருந்து...

**லெனின்**

இருபதாம் நூற்றாண்டின் புரட்சிகளை உதாரணங்களாய் எடுத்துக் கொண்டால், போர்த்துகீசிய, துருக்கிப் புரட்சிகள் இரண்டும் முதலாளித்துவப் புரட்சிகளே என்பதை நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும். ஆனால் இவை இரண்டில் எதுவும் 'மக்கள்' புரட்சியல்ல; ஏனெனில் எதிலும் மக்களில் பெருந்திரளானோர், மிகப் பெருவாரியானோர் குறிப்பிடத்தக்க அளவுக்குத் தமது சொந்தப் பொருளாதார, அரசியல் கோரிக்கைகளை எழுப்பிச் செயலூக்கத்துடன் சுயேச்சையாய் முன்வரவில்லை. இதற்கு மாறாக 1905-07ஆம் ஆண்டுகளின் ருஷ்ய முதலாளித்துவப் புரட்சி, போர்த்துகீசிய, துருக்கிப் புரட்சிகளுக்குச் சில நேரங்களில் கிடைத்தது போன்ற 'பிரமாதமான' வெற்றிகள் பெறவில்லை என்றாலும்கூட, இது 'மெய்யான மக்கள்' புரட்சி என்பதில் ஐயமில்லை; ஏனெனில் பெருந்திரளான மக்கள், அவர்களில் பெரும்பான்மையினர், ஒடுக்குமுறையாலும் சுரண்டலாலும் நசுக்கப்பட்ட மிகவும் 'அடிநிலை' சமுதாயத் தொகுதியோர் சுயேச்சையாய்க் கிளர்ந்தெழுந்து தமது சொந்தக் கோரிக்கைகளின் முத்திரையை, ஒழிக்கப்பட்டு வந்த பழைய சமுதாயத்துக்குப் பதிலாய் ஒரு புதிய சமுதாயத்தைத் தமது சொந்த வழியில் கட்டியமைப்பதற்கான தமது முயற்சிகளின் முத்திரையை இப்புரட்சியின் போக்கு அனைத்திலும் பதித்தனர்.

ஐரோப்பாவில் 1871-இல் கண்டத்து நாடு எதிலும் பாட்டாளி வர்க்கம் மக்களில் பெரும்பான்மையாய் இருக்கவில்லை. 'மக்கள்' புரட்சியானது, பெரும்பான்மையோரை மெய்யாகவே தன் போக்கிலே ஒழுத்துச் செல்லும் புரட்சியானது பாட்டாளி வர்க்கம், விவசாயிகள் ஆகிய இரு பகுதியோரையும் தன்னுள் கொண்டதாய் இருந்தால்தான் இவ்வாறு 'மக்கள்' புரட்சியாய் இருந்திருக்க முடியும். இது போன்ற கூட்டணி இல்லாதவரை ஜனநாயகம் நிலையற்றதாகவே இருக்கும்; சோஷலிச மாற்றம் ஏற்படுவது சாத்தியமல்ல.

தகர்க்கப்படும் அரசுப் பொறியமைவுக்குப் பதிலாய் அமையப் போவது எது?

1847-இல் கம்யூனிஸ்டு அறிக்கையில் மார்க்ஸ் இந்தக் கேள்விக்கு அளித்த பதில் முற்றிலும் கருத்தியலானதாகவே இருந்தது. இன்னும் கறாராய்க் கூறுவதெனில், அந்தப் பதில், செய்ய வேண்டிய பணிகளைச் சுட்டிக் காட்டியதே தவிர இவற்றைச் செய்து முடிப்பதற்கான வழிகளைச் சொல்லவில்லை. இந்த இயந்திரத்துக்குப் பதிலாய் 'ஆளும் வர்க்கமாய்ப் பாட்டாளி வர்க்கம் ஒழுங்கமைய வேண்டும், ஜனநாயகத்துக்கான போரில் வெற்றி பெற' வேண்டும் என்பதே கம்யூனிஸ்டு அறிக்கையில் தரப்படும் பதில்.


மார்க்ஸ் கற்பனைகளில் ஈடுபடவில்லை. பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாய் நிறுவன வழியில் ஒழுங்கமைவது திட்டவட்டமான எந்த வடிவங்களில் நடந்தேறும், இந்த ஒழுங்கமைப்பு 'ஜனநாயகத்துக்கான போரில்' முழு நிறைவான, முடிவான 'வெற்றி பெறுவதுடன்' இணைக்கப்படுவதற்குரிய திட்டவட்டமான முறை என்ன என்ற கேள்விக்கு வெகுஜன இயக்கத்தின் அனுபவம் பதிலளிக்குமென்று அவர் எதிர்பார்த்தார்.

கம்யூனுடைய அனுபவம் சொற்பமாகவே இருந்ததென்றாலும், மார்க்ஸ் இந்த அனுபவத்தை "பிரான்சில் உள்நாட்டுப் போர்" என்ற நூலில் மிகவும் உன்னிப்பாய்ப் பகுத்தாய்ந்தார். இந்நூலின் மிக முக்கிய வாசகங்களை மேற்கோளாய்த் தருகிறோம்.

'நிரந்தர சேனை, போலீஸ், அதிகார வர்க்கம், சமயக் குருமார் அமைப்பு, நீதிமன்றம் ஆகிய சர்வ வியாபகச் செயலுறுப்புகளைக் கொண்ட மத்தியத்துவ அரசு அதிகாரம்' மத்திய காலத்தில் உதித்து, பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓங்கி வளர்ந்தது. மூலதனத்துக்கும், உழைப்புக்குமிடையே வர்க்கப் பகைமைகள் வளர்ச்சியுற்றதைத் தொடர்ந்து 'மேலும் மேலும் அரசு அதிகாரமானது உழைப்பை அடக்குவதற்கான பொது சக்தியின் தன்மையை, வர்க்க ஆதிக்கத்திற்குரிய பொறியமைவின் தன்மையைப் பெற்றது. வர்க்கப் போராட்டத்தின் முன்னேற்றத்தைக் குறிக்கும் ஒவ்வொரு புரட்சியையும் அடுத்து, அரசு அதிகாரத்தின் அப்பட்டமான பலவந்தத்தன்மை மேலும் மேலும் கண்கூடாய்ப் புலப்படுகிறது'. 1848-49 ஆம் ஆண்டுகளின் புரட்சிக்குப் பிற்பாடு அரசு அதிகாரம் 'உழைப்புக்கு எதிரான மூலதனத்தின் தேசியப் போர்க்கருவி' ஆகிவிட்டது. இரண்டாவது சாம்ராஜ்யம் இதை உறுதியாக்கிற்று.

'சாம்ராஜ்யத்திற்கு நேர்மாறான எதிர்நிலையே கம்யூன்'. 'வர்க்க ஆதிக்கத்தின் முடியாட்சி வடிவத்தை மட்டுமின்றி, வர்க்க ஆதிக்கத்தையே அகற்றிடுவதற்கான ஒரு குடியரசுக்கு உரிய குறிப்பிட்ட ஒரு வடிவமே கம்யூன்...'

திராவிடப்பள்ளி



நீங்கள்தான் எங்களின் பள்ளிக்கூடம்
நீடு துயில் நீக்கிய அறிவுப்பாடம்
நெஞ்சிலே நிலைத்திட்ட உம்பெயர் சொல்லி
நிறுவினோம் இன்றொரு திராவிடப் பள்ளி!


தொடர்புக்கு :

புதிய எண்.120, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
தொலைபேசி எண்: 044-24726408
ஈ-மெயில்: admin@dravidapalli.com